**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 7**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ................

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

3. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .............

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

4. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ...........

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

5. 'தன் நாட்டு மக்க ளுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வ ம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

6. ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் ................

அ) கல்வி, கேள்வி ஆ) கல்வி, ஓவியம்
இ) கலை, பண்பாடு ஈ) கலை, மேடைப்பேச்சு

**7.** சங்கத்தமிழரின் திணை வாழ்வு எதை அடிப்படையாகக் கொண்டது?

அ) நெசவை ஆ) போரினை

இ) வேளாண்மையை ஈ) கால்நடையை

**8.** மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியப்பாடல்கள்.........................

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

**9.** 'அடிகள் நீரே அருளுக' என்று இளங்கோவடிகளிடம் வேண்டிக் கொண்டவர் .........................

அ) கம்பர் ஆ) கபிலர்

இ) திருத்தக்கதேவர் ஈ) சீத்தலைச்சாத்தனார்

**10.**புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?

அ) ஒன்பது ஆ) பதினொன்று

இ) பன்னிரண்டு ஈ) பதிமூன்று

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

12.பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

13.புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

**14.பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

15.பாடாண் திணையை விளக்குக.

16.மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

**17.அகராதியில் காண்க.**

அ) துரிஞ்சில், ஆ) மிரியல்,

**18.ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம்.

**19.மொழிபெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**20.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.‘முதல்மழை விழுந்ததும்’ என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

22.அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

23.“தலையைக் கொ டுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்ற த்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்’ என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

25.சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

27. நிகழ்வுகளைத் தொ குத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள் விழா**

*இடம் : பள்ளிக் கலையரங்கம்.* *நாள் :* 12.06.2023

*கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.*